முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.9.2023) கொளத்தூர், வீனஸ் எவர்வின் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் Tally பயிற்சி முடித்த மாணவ, மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினிகளையும், தையல் பயற்சி முடித்த பெண்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் மோட்டார் பொருத்திய இலவச தையல் இயந்திரங்களையும் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.9.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தான்தோன்றி அம்மன் கோயில் தெருவில் 11 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட ஆனந்தன் பூங்காவை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தஞ்சை மத்திய மாவட்டத்தில்

பேரறிஞர்அண்ணா115வதுபிறந்தநாள்விழா!

மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!

தஞ்சை, செப்.14-

தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் அறிக்கை வருமாறு :-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த முன்னிட்டு நாளை - (15.09.2023 வெள்ளிக் கிழமை) காலை 8 மணியளவில் தஞ்சை, கீழவாசல் காமராஜர் சிலையிலிருந்து ஊர்வலமாகச் சென்று தஞ்சை பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட உள்ளது.

அது சமயம் நாடாளுமன்ற உறுப்பினர், நாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், நிர்வாகி கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகத்தினர் சிறப்பாக கொண்டாடுவீர்!

மாவட்டக் கழகச் செயலாளர் பி. பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, செப்.14-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுமாறு தர்மபுரி மேற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி. பழனியப்பன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் பி. பழனியப்பன் அறிக்கை வருமாறு:-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 114 ஆம் ஆண்டு பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடும் பொருட்டு நாளை (15.9.2023 - வெள்ளிக்கிழமை) தர்மபுரி மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகங்கள் தோறும் அண்ணாவின் திருவுருவச்சிலை மற்றும் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கழகப் பொறுப்பாளர்களும், தொண்டர்களும் சிறப்பாக கொண்டாட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அன்று காலை 9 மணி அளவில் அரூர் ரவுண்டானாவில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு தருமபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் படும். இந்த நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட,ஒன்றிய, பேரூர் மற்றும் சார்பு அணிகள் நிர்வாகிகள், கழகப் பொறுப்பாளர்களும், கழகத் தொண்டர்களும் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் பி. பழனியப்பன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பேரறிஞர் அண்ணா 115வது பிறந்தநாள் விழா!

தருமபுரி கிழக்கு மாவட்டத்தில்எழுச்சியுறகொண்டாடுவோம்!

மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ. சுப்பிரமணி அறிக்கை!

தருமபுரி, செப்.14-

தருமபுரி மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ. சுப்ரமணி அறிக்கைவருமாறு:-

காஞ்சி தந்த காவிய தலைவர் உலக தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காவும் , தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும் , தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுப்பட்ட உத்தமர் - கடமை கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - " மெட்ராஸ் ஸ்டேட் " என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதை சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து

வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2023 அன்று காலை 9 மணி அளவில் ராஜகோபால் கவுண்டர் பூங்கா அருகில் இருந்து ஊர்வலமாக சென்று தருமபுரி நான்கு ரோடு அருகில் உள்ள அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாவட்ட கழக செயலளாார் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

அது சமயம் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள், ஊராட்சி, வார்டு கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை

மேற்கு மண்டல நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

பொள்ளாச்சி மா.உமாபதி அறிக்கை!

பொள்ளாச்சி, செப்.14-

கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் பொள்ளாச்சி மா.உமாபதி அறிக்கை வருமாறு:-

கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மேற்கு மண்டல மாவட்டங்களான சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்தி, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மாநகரம், திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, திருப்பூர் மாநகரம் வடக்கு. திருப்பூர் மாநகரம் தெற்கு, கோவை மாநகரம், கோவை வடக்கு கோவை தெற்கு, நீலகிரி ஆகிய மாவட்டங்களின் தலைவர், துணைத் தலைவர் , அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில் 16. 9.2023 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் மாநிலச் செயலாளர் பொள்ளாச்சி உமாபதி தலைமையில் மாநில துணைச் செயலாளர் திருமதி மீனா ஜெயக்குமார் முன்னிலையில் நடைபெற உள்ளது. அவமயம் சம்பந்துப்பட்ட அனைத்து மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் அனைத்து நிர்வாகிகளும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான தலைவர் கலைஞர் அவர்களின் கவிதைகள், மற்றும் திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டிகளை நடத்துதல்,

மாவட்டம் முழுவதும் தலைவர் கலைஞர் அவர்கள் கதை வசனம் எழுதிய திரைப்படங்களை பொது இடங்களில் திரையிடல் தொடர்பாக

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் தளபதியார் மு.க. ஸ்டாலின் அரங்கில் கிழக்கு மாவட்ட பொது உறுப்பினர் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பாக அழைப்பாளராக கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, கோமதி, மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், பொதுக்குழு உறுப்பினர்கள் மலர் விழி ராஜா, முத்துலிங்கம், சோமசுந்தரம், சந்திரமோகன், தமிழ்ச்செல்வன், ஷேக் மைதீன், கோபால், ராஜா, செயற்குழு உறுப்பினர்கள் மனோகரன், கணேசன்,சாமி நாதன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் விஜயகுமார், உமாசங்கர், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், அன்பு (எ) மருதமுத்து ,வெண்ணிசேகர், டாக்டர் செழியன்,சித்தார்த்தன், அழகுவேல் மணி, பாலமுருகன், நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், வேல்முருகன் மற்றும் பேரூர் செயலாளர்கள்,சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

செப். 17 அன்று வேலூரில் நடைபெறும்

கழக முப்பெரும் விழாவில் நாகை மாவட்டத்தில் இருந்து திரளாக பங்கேற்போம்!

நாகை மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்

நாகை, செப்.14-

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். மாநில விவசாய அணி துணை தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச் சந்திரன், கற்பகம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.பாண்டியன், எஸ்.சிவக்குமார், எஸ்.பன்னீர்செல்வம், பேரூர் கழகச் செயலாளர்கள் முகமதுசுல்தான், கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ப.உதயக்குமார், கேஸ் வி.செந்தில், பி.என்.கார்த்தி, எஸ்.வி.டி.அருள், ஆர்.டி.துரைராஜ், ஜி.சத்தியமூர்த்தி, எஸ்.வெற்றிச்செல்வம், வி.கமல், ஆர்.சுரேந்தர், பெ.முருகானந்தம், தினேஷ்குமார், டி.தமயந்தி, சுரேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டேனியல்சத்திய, கலையரசன், பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா, தொண்டு செய்து பழுத்த பழம் தந்தை பெரியார் பிறந்த நாள்விழா, சென்னை ராயபுரம் ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில் 17.9.1949ல் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழக பேரியக்கம் தொடங்கப்பட்ட நாள் என கழக முப்பெரும் விழா வரும் 17.9.2023 அன்று வேலூரில் நடைபெறுகிறது. இந்த முப்பெரும் விழாவில் நாகை மாவட்டத்தில் இருந்து அதிக வாகனங்களில் வேலூர் பள்ளிக் கொண்டானுக்கு சென்று முப்பெரும் விழாவில் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டுகளில் இருந்து கழகத்தினர் கலந்து கொள்வது என்றும், தனது 14 வயதில் தமிழுக்கு கொடி பிடித்து தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் உழைத்திட்ட, களம் கண்ட 13 சட்டமன்ற தேர்தலிலும் வெற்றி பெற்று 5 முறை தமிழ்நாட்டின் முதல்வராக இருந்து தமிழ்நாடு முழுவதும் முதன் முதலில் மேல் நிலை நீர் தேக்க தொட்டி அமைத்து அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்கிய, கை ரிக்ஷாவை ஒழித்து சைக்கிள் ரிக்ஷா வழங்கிய, மகளிர் சுய உதவிக்குழுவை தோற்றுவித்த, தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து, காவிரி நடுவர் மன்றம், பெண்களுக்கு சொத்தில் சமபங்கு, மாணவர்களுக்கு இலவச பேருந்து பயணம், குடும்பத்தில் முதல் பட்டதாரியின் படிப்பு செலவு அரசே ஏற்கும், அனைத்து குடும்பத்திற்கும் கலர் டிவி என எண்ணற்ற திட்டங்களை தீட்டி செம்மையாக செயல்படுத்திய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சார்பு அணிகளின் சார்பில் தலைமைக் கழகம் அறிவித்தவாறு சார்பு அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் ஆகியவற்றின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஒருகிணைந்து மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களிடம் ஆலோசனை பெற்று நிகழ்ச்சிகளை சிறப்பாக எழுச்சியுடன் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக செய்திட வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் உள்ள 31 ஆயிரம் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் படித்த அன்று தொடக்கப்பள்ளி, இன்று ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தொடங்கி வைத்த தமிழ் நாடு

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், நாகை அவுரிதிடலில் நடைபெற்ற நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு ஆக்கப்பூர்வமான கருத்துக்களை எடுத்து இளைஞர் அணியை எழுச்சி பெற செய்தமைக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வது என்றும், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு கொலை மிரட்டல் விட்ட உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த போலி சாமியார் பரமஹன்ஸ்ஆச்சார்யாவிற்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்து கொள்வது என்றும், வரும் 15.9.2023ம் தேதி தமிழகத்தில் உள்ள மகளிருக்கு மாதாமாதம் ரூ. 1000 வீதம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை தொடங்கி வைக்க உள்ள கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வது என்றும், இந்தியாவில் உள்ள முதல்வருக்கெல்லாம் முதல்வராக உள்ள இந்தியா கூட்டணியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக உள்ள கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் கரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் நாகை தொகுதியில் போட்டியிடும் கழகத்தலைவர் கைக்காட்டும் வேட்பாளர் வெற்றிக்கு சிறப்பாக தேர்தல் பணியாற்றி அதிக வாக்குகளை பெற்று தந்து வெற்றிக்கு பாடுபடுவது என்றும், வரும் டிசம்பர் 17ம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநாட்டிற்கு நாகை மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் இளைஞர்களை பங்கு செய்து மாநாடு சிறக்க இப்போது அந்தந்த பகுதியை சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களை ஆலோசனை பெற்று இளைஞர் அணியினை சேலத்திற்கு அழைத்து செல்ல ஏற்பாடுகளை இப்போதே தொடங்கிட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஈரோடு வடக்கு மாவட்டத்தில்

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள்!

மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை!

ஈரோடு, செப். 14-

ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை வருமாறு:-

அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் செப்டம்பர் 15.09.2023 வெள்ளிக்கிழமை அன்று ஈரோடு வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக்கழக பகுதிகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலை மற்றும் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, இனிப்பு வழங்கி கொண்டாடப்பட வேண்டும். நாளை (செப்டம்பர் 15ம் தேதி) நமது கழகத் தலைவர் அவர்கள் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை துவக்கி வைக்கிறார். எனவே கழக நிர்வாகிகள் அனைவரும் அந்த திட்டத்தின் விளக்க உரைகளை சுவர் விளம்பரங்கள், துண்டு பிரசுர நோட்டீஸ்கள், பத்திரிக்கைகள் என அனைத்திலும் பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் விதத்தில் தங்களது செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

எனவே இந்த நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், வார்டு, கிளை கழக நிர்வாகிகள் மற்றும்

அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன் பிறப்புகள், கூட்டுறவு மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் அந்தந்த பகுதிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க இளைஞர் அணி சார்பில் இல்லம் தேடி உறுப்பினர் சேர்த்தல் முகாமை மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி தொடங்கி வைத்தார். உடன் செ.இராமலிங்கம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, குடந்தை மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி.இரா.தெட்சிணாமூர்த்தி, குடந்தை கிழக்கு ஒன்றியச் செயலாளர் உள்ளூர் டி.கணேசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.கே.எம். இராஜா, மாநகர அமைப்பாளர் அ.வெங்கடேசன் உள்ளிட்ட மாநரக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.